# Prime Minister to address High-Level Segment of ECOSOC on 17 July, 2020

July 16, 2020

## பிரதமந்திரி 2020 ஜூலை 17 அன்று ECOSOC இன் உயர்மட்ட பிரிவில் உரையாற்ற உள்ளார்.

**ஜூலை 15, 2020**

பிரதமர் நரேந்திர மோடி 2020 ஜூலை 17 வெள்ளிக்கிழமை நியூயார்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையில் 09.30-11.30 ( உள்ளூர் நேரம் ) ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக கவுன்சில் அமர்வில் இந்த ஆண்டு உயர் மட்ட பிரிவில் ஒர் முக்கிய உரையை நிகழ்த்துவார். பிரதம மந்திரி நோர்வே பிரதமர் மற்றும் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டனியோ குடரெஸ் ஆகியோருடன் கலந்துரையாடலில் கலந்து கொள்வார்.

வருடாந்திர உயர் மட்ட பிரிவு, அரசு, தனியார் துறை, சிவில் சமூகம் மற்றும் கல்வியாளர்கள் அகியோரின் பல்வேறு வகையான உயர்மட்ட பிரதிநிதிகளை கூட்டுகிறது. இந்த ஆண்டின் உயர்மட்டப் பிரிவின் கருப்பொருள் " Covid -19 க்கு பிறகு பலதரப்பு: 75 வது ஆண்டுவிழாவில் நமக்கு எந்த வகையான ஐ.நா தேவை"
.

மாறிவரும் சர்வதேச சூழல் மற்றும் Covid-19 பெருந்தொற்றிற்கு எதிராக அமைக்கப்படிருக்கும் இந்த அமர்வு பன்முகத்தன்மையின் போக்கை வடிவமைக்கும் முக்கியமான சக்திகள் மீது கவனம் செலுத்துகிறது மற்றும் வலுவான தலைமை, பயனுள்ள சர்வதேச நிறுவனங்கள், பங்கேற்பின் விரிவாக்கம் மற்றும் உலகளாவிய மேம்பட்ட முக்கியத்துவம் ஆகியவற்றின் மூலம் உலகளாவிய பொது நன்மைக்கான நிகழ்ச்சி நிரலை மேம்படுத்துவதற்கான வழியை ஆராயும்,

2021-2022 காலத்திற்கான ஜூன் 17 அன்று பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினராக இந்தியாவின் பெருந்தேர்தலுக்கு பின்னர் பிரதமருக்கு பரந்த ஐ.நா உறுப்பினர்களிடம் உரையாற்ற இதுவே முதல் வாய்ப்பாகும். ஐ.நா நிறுவப்பட்ட 75 வது ஆண்டு நிறைவையொட்டி ஈகோசோகின் உயர் மட்ட பிரிவின் கருப்பொருள் இந்தியாவின் பாதுகாப்பு கவுன்சிலின் முன்னுரிமையையும் எதிரொலிக்கிறது, இதில் Covid-19 க்கு பிந்தைய உலகில் " சீர்திருத்த பன்முகத்தன்மைக்கு" நாங்கள் அழைப்பு விடுத்துள்ளோம். ECOSOC இன் தொடக்க ஜனாதிபதி பதவியில் (சர் ராமசுவாமி முதலியார் 1946 ல்) இந்தியாவின் பங்கையும் இது நினைவுபடுத்துகிறது. முன்னதாக 2016 ஜனவரியில் ECOSOC இன் 70 வது ஆண்டுவிழாவில் பிரதமர் சிறப்புரையாற்றினார். .

**நியூ டெல்லி**
**ஜூலை 15, 2020**

DISCLAIMER : This is an approximate translation. The original is available in English on MEA's website and may be referred to as the official press release.